**ARTICLE 34 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00088**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 41–46
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

# கி ராஜநாராயணன் படைப்புகளில் வட்டார வழக்குகள்

**முனைவர். சகாயமேரி இ**[1,*]
[1]இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி-627008., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். சகாயமேரி இ — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்
தமிழ் இலக்கிய உலகில் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் கி.ராஜநாராயணன். இவர் தூத்துக்குடி மாவட்டத்தின் இடைச்சவள் என்ற கிராமத்தில் பிறந்தவர் தான் வாழும் மண்ணையும் அந்த மண்ணில் வாழும் மனிதர்களின் வாழ்வியலையும் பேச்சு மொழியிலேயே அதாவது வட்டார வழக்கினை கொண்டு இலக்கியம் ஆகியவர் அவர இவரது படைப்புகளில் பயின்று வரும் வட்டார வழக்குச் சொற்கள் அவற்றின் அமைப்பில் பண்பாட்டு முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாக இருக்கின்றது சமூகத்தை தன்னுள் உள்ளடக்கி இருப்பது தான் இலக்கியம் என்று கூறுவோம். அந்த இலக்கியத்தை படைக்கும் படைப்பாளி என்பவன் சமூகத்தின் ஒரு அம்சமாக இருந்து அவனது படைப்புகளை வெளிப்படுத்துவான் என்பதற்கு உதாரணமாக கி.ராஜநாராயணனுடைய படைப்புகள் காணப்படுகின்றது இப்படைப்புகளில் வட்டார மரபுகள் அதன் தாக்கம் எந்த அளவில்i இருக்கின்றது என்பதை கி ராஜநாராயணனின் கோபலபுரத்து மக்கள், பிஞ்சுகள், கிடை, போன்ற நாவல்களில் வெளிப்படும் மக்களின் பழக்கவழக்கங்கள் பொருளாதார நிலைகள் விவசாயம் மண்ணின் தன்மை இவற்றை அடிப்படையாகக் கொண்ட வட்டார வழக்குச் சொற்கள் வட்டார வழக்கு சொற்களிடையே கதை மாந்தர்களின் களப்பின்னனினையும் உயிரோட்டமும் உள்ள படைப்பு எவ்வாறு மக்களின் வாழ்வியல் தரத்தை பிரதிபலிப்பதாக இருக்கின்றது என்பதை மைய கருவாகக் கொண்டு கி.ராஜநாராயணன் படைப்புகளில் உள்ள வட்டார வழக்குகளை ஆராய்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

**Keywords / திறவுச் சொற்கள்:** நீத்து பாகம் – பழைய சோற்று நீர் மகுளி – சோற்றுக்கஞ்சி கெடாசுதல் – எறிதல் சீனி பையல் - செல்லமாக அழைக்கப்படும் சிறுவன் ஆமுடான் – கணவன் சிறு வண்டு- சிறு குழந்தைகள் அம்புட்டு- அவ்வளவு

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** இ, மு. ச. (2026). கி ராஜநாராயணன் படைப்புகளில் வட்டார வழக்குகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் கி.ராஜநாராயணன் இவரை கி ரா என்று சுருக்கமாக அனைவரும் அழைப்பர். பேச்சு மொழியையே எழுத்து மொழியாக்கி கோவில்பட்டி மற்றும் அதனை கிராமங்களில் மக்கள் பேசும் வழக்குச் சொற்களை மையமாக வைத்து அதாவது வட்டார வழக்கை பேச்சு மொழியிலிருந்து எழுத்து மொழியாக மாற்றி அமைத்து அதற்கு ஒரு தனித்துவமான இலக்கியத்தை உருவாக்கியவர் இவர் வட்டார வழக்கு என்பது வெறும் சொற்களின் தொகுப்பாக அல்லாமல் அந்தப் பகுதி

மக்களின் பண்பாடு வாழ்வியல் சடங்குகள் அவர்களின் உழைப்பு மற்றும் உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும் இவரது படைப்புகளான கோபாலபுரத்து மக்கள் கிடை பிஞ்சுகள் ஆகிய படைப்புகளை மையமாக வைத்து கரிசல் மண்ணின் வட்டார மொழி பயன்பாடும் அதன் சமூக பண்பாட்டுத் தாக்கம் எவ்வாறு அவரது நாவல்களில் வட்டார வழக்குச் சொற்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது .

## கரிசல் பட்டார வழக்கு

கரிசல் வட்டாரம் என்பது கோவில்பட்டி சாத்தூர் விளாத்திகுளம் எட்டயபுரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது ஆகும் தமிழ் இலக்கியத்தில் வட்டார இலக்கியத்தின் முன்னோடியாக திகழ்ந்தவர் புதுமைப்பித்தன் இவர் தம்முடைய படைப்புகளில் முழுமையாக வட்டார வழக்குகளை எடுத்துக்காட்டவில்லை ஆனால் கி ரா ராஜநாராயணன் தம்முடைய படைப்புகள் ஒவ்வொன்றிற்கும் கடைக்கல அமைப்பினை எங்கு தேடிச்சென்றும் அலையவில்லை தன் வாழ்வில் கண்ட கேட்ட செய்திகள் காலம் களம் பாத்திரங்களின் தனித்தன்மையை வட்டார இலக்கியத்தை வலுப்படுத்திய ஒரு முன்னோடியாக திகழ்ந்து இருக்கின்றார் இவரது ஒவ்வொரு கதைக்கும் கரு என்பதே மிகவும் முக்கியமானதாகும் கருவே ஒவ்வொரு படைப்பாளரின் திறமையை அல்லது கதை பொருளை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல துணை புரிகின்றது உலகப் பொதுவான பிரச்சனைகளை ஒரு குறிப்பிட்ட வட்டார பின்னணியில் சித்தரிக்கும் திறமை ஹீராவின் கதைகள் பலவற்றிலும் விவசாயம் விவசாயம் தொடர்பான பிரச்சனைகள் தொழில் தீப்பெட்டி தொழில் மற்றும் ஆடு மேய்த்தல் தொழில் போன்ற போன்றவை மேற்கூறிய கதைகளுக்கு முன்னுரிமை கொடுத்து படைத்துள்ளார்

## பிஞ்சுகள் குறுநாவலில் வட்டார வழக்குகள்

கரிசல் பகுதியில் வாழும் குழந்தை தொழிலாளர்களின் பிரச்சினைகளை மையமிட்டு தம் கதைகளை உருவாக்கி உள்ளார் தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு குழந்தைகள் வேலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் இதனால் குழந்தை கல்வி பாதிப்பதோடு உடல் நலமும் பாதிக்கின்றன இச்செய்தியை தனது கதைகளில் அப்பகுதி வட்டாரச் சூழலோடு சேர்ந்து கதையை கூறுகின்றார் பெண் குழந்தைகளுக்கு சூட்டு கோளினால் ஈரலில் சூடு போடப்பட்டது குழந்தைகள் எவர்சில்வர் தூக்குச் சட்டியையும் சிறு கையில் ஒரு டப்பாவையும் தூக்கிக்கொண்டு புற்றுக்குள் நுழைகின்ற நுழைகின்றது போல தீப்பெட்டிக்குள் குச்சிகளை அடுக்குவது போல அப்ப பிள்ளைகள் அங்கு வருகின்ற வண்டிகளில் திணிக்கப்பட்டு தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர் என்பதை கூறுகின்றார் பிஞ்சுகள் குறுநாவலில் கரிசல் வட்டாரத்து குழந்தைகளின் உலகம் அவர்களின் விளையாட்டுகள் இயல்புகள் மற்றும் இவற்றையெல்லாம் அவர்கள் மறந்து தீப்பற்றி தொழிற்சாலைகளுக்குள் நுழைவதே வேதனையுடன் அவர் வெளிப்படுத்துகின்றார் இதில் சில உரையாடல்கள் மூலம் வட்டார வழக்குச் சொற்களை

கிட்டிப்புல்லு பம்பரம் சில்லி போன்ற சொற்களை கூறுகின்றார் “லேய் உன்னோட சிறுவாட்டுப் பானையில் எம்புட்டு காசு சேர்ந்து இருக்கும் “

“என்னடா செய்க “

" அங்கன போயி உட்காரு %
"உனக்கு என்ன விவரம் தெரியும் ₹

அம்மாஞ்சி,அத்தாச்சி, அயினி, ஆவலாதி, நசப்பு சொட்டசிருசு, கெடாசு தல, ஒத்தை,வ ம்பலத்தல் சீமை,சரக்கு,சல்லி, புள்ள குட்டி,ஆச்சாரம், மசியுறது,அலைச்சல், ஆப்பம், கெடா,துட்டு,வெள்ளென,சீமை,செத்த நேரம், கடுதாசி, அம்புட்டு, அளவு,சீக்கு, பேத்தல் இவை போன்ற வட்டார வழக்குச் சொற்கள் மக்களிடையே , தலைமுறையாக புழக்கத்தில் இருக்கும் வாய்மொழிச் சொற்கள் ஆகும் மக்களின் வாழ்வியலையும் குழந்தை மனங்களின் வெகுளித்தனத்தையும் கிராமத்து மனிதர்களின் உணர்வுகளையும் படம் பிடித்து காட்டும் கதையான பிஞ்சுகள் குறுநாவலில் கரிசல் மண்ணின் தனித்துவமான வட்டார வழக்குச் சொற்களை பதிவு செய்து உயிரோட்டம் கொடுத்துள்ளார் ஆசிரியர் இச்சொற்கள் சாதாரண அகராதி வழக்கில் இல்லாதவை இவை மக்களிடையே கரிசல் பண்பாட்டின் அடையாளமாக திகழ்கின்றன மக்களின் அன்றாட உரையாடல்கள் சண்டை சச்சரவுகள் பாசம் மற்றும் நகைச்சுவை ஆகியவையும் பிஞ்சுகள் குறை நாவலின் உரையாடல்கள் இயல்பாக வெளிப்படுகின்றன மனிதர்களின் செயற்கை தனமற்ற இயல்பான பேச்சை பிரதிபலிப்பதாகவும் சிறுவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பொழுது பயன்படுத்தும் துணியும் கரிசல் வழக்கின் நகைச்சுவை உணர்வும் உரையாடல்களை மிருகெற்று உணவாக உள்ளனர் கி ராஜநாராயணனின் கூற்றுப்படி பேச்சு வழக்கிற்கு தான் உயிர்ப்பு அதிகம் அகராதி தமிழ் அழிக்காத ஒருவித நெருக்கத்தையும் மண்ணின் மனத்தையும் வட்டார வழக்கு உரையாடல்கள் வாசகர்களுக்கு வழங்குகின்றன பிஞ்சு பிஞ்சுகள் குறுநாவலில் வரும் உரையாடல்கள் வெறும் உரையாடல்கள் மட்டுமல்ல அது கரிசல் மக்களின் வாழ்க்கை முறை அவர்களின் சமூக உறவுகள் மற்றும் பண்பாட்டு அமைப்பின் நேரடி வழக்குகளாக உள்ளன.

## கோபாலபுரத்து மக்கள் நாவலில் வட்டார வழக்குகள்

கோபாலபுரத்து மக்கள் என்ற நாவலில் பகடை மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை ஊருக்குள் பேசாமல் ஒரு வேம்படி நிழலில் கூடுவார்கள் ஏனென்றால் ஊரில் களத்து பிச்சை போடுவார்கள் அதில் ஒருவன் களத்து பிச்சை போடுவான் ஒருவன் மண்ணடிப்பான் அப்படிப்பட்டவனை ஒரு பங்குல போட்டு பகுத்தா பங்காளி ஏத்துக்கிடுவானா என ஒரு இன மக்களின் தனிப்பட்ட பிரச்சனைகளை கருவாகக் கொண்டு அமைத்துள்ளார் ஆசிரியர்.

கோபாலபுரத்து மக்கள் நாவலில் கரிசல் நில மக்களின் பண்பாடு வாழ்க்கை முறை மற்றும் அவர்களின் தனித்துவமான உரையாடல் மொழியை ஆசிரியர் பதிவு செய்துள்ளார் இயல்பான கிராமத்து பேச்சுகளும் உறவு முறையை உரையாடல்களும் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர் தெலுங்கு கலந்த தமிழ் சொற்கள் இந் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது தெலுங்கு சொற்களின் தாக்கம் என் நாவலில் பதிவு செய்யப்படுவதற்கு காரணம் விஜயநகர பேரரசு காலத்தில் தெற்கே தெற்கு குடியேறிய மக்களின் பின்னணி இப்பகுதியில் காணப்படுவதால் இச்சொற்கள் இந்நாவலில் இடம்பெறுகின்றன

அவுரி,அவுரி என்றால் நீலச்சாயம் தயார் செய்ய பயன்படும் செடி வகை. அம்மாஞ்சி- தாய் மாமன், இம்புட்டு,அம்புட்டு,எம்புட்டு ஓர முறை,கட்டி போடுதல் தவிட்டுப் பானை பொட்டி பாத்திரம், மசியல், தவிட்டுப் பானை,

கம்பஞ்சோறு, ஆப்ப கல்லு, இறுக்கி, உச்சினி, எழுப்பு,ஒத்தையடி, பாதை கத்தாழை களவாணி கெடா,செத்த நேரம் பின்னே, வாங்கானம், போன்ற வட்டார வழக்குச் சொற்களும்,

> “அவனுக்கு என்ன குறைச்சல்ன்னு கதையை அளக்கீங்க ஓரம் முறையில் பொண்ணு இருக்கிறப்போ தூரத்துல போயி தேடுவானேன் “
> “நம்ம ஊரு ஜனங்களுக்கு வயிறு நிறைஞ்சா போதும் பொய் பித்தலாட்டம் பேசி தெரியாத பயலுக “
> “கொஞ்சம் மசியலும் கம்பஞ்சோறும் திங்குறீங்களா? தாகத்துக்கு மோர் ஊத்தவா? “

உறவுமுறை ஆலோசனைக, கிராமத்து மனிதர்களின் எதார்த்த பேச்சுகள் இயல்பான கிராமத்து பேச்சு வழக்கும் உறவுமுறை உரையாடல்களும் அன்றாட சமையல் மட்டும் உபசரிப்பு சொற்கள் கரிசல் மொழியின் தனித்துவ இயல்புகளாக ஆசிரியர் சுட்டிக்காட்டி உள்ளார் உறவுகளில் அத்தை மாமன் பங்காளி போன்ற உறவுப் பெயர்கள் மரியாதை சொல்லாகவும் அன்பின் மிகுதியாகவும் உரையாடல்களில் கையாளப்பட்டுள்ளது. இயற்கை மற்றும் விவசாய சார்ந்த படிமங்கள் மழையின் போக்கை பற்றியும் நிலத்தின் தன்மையைப் பற்றியும் பேசும்போது சில வட்டார சொற்களும் இயல்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## கிடை நாவலில் வட்டார வழக்குகள்

கிடை நாவல் கோவில்பட்டி மற்றும் அதனைச் சுற்றி உள்ள கரிசல் நிலத்து மேய்ப்பவர்களின் வாழ்க்கை முறை சடங்குகள் நம்பிக்கை மற்றும் அவர்களின் எளிய பேச்சை காட்சிப்படுத்தும் விதமாக ஆசிரியர் கதை புனைந்து உள்ளார் இன்னாவளில் வட்டார வழக்குச் சொற்கள் மற்றும் உரையாடல்களின் தனித்துவம் அந்த வட்டாரத்திற்கே உரியதாக அமைகின்றது கே ராஜநாராயணன் தனது படைப்புகளில் அகராதி சொற்களைத் தவிர்த்து கரிசல் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் இயல்பான சொற்களையே கையாண்டு உள்ளார் கிடை நாவலில் காணப்படும் முக்கியமான வட்டார வழக்குச் சொற்கள் கிடை என்பதன் பொருளை ஆடு அல்லது மாடுகளை இரவு வேளையில் விளை நிலங்களில் உரத்திற்காக தங்க வைக்கும் முறை. மாடுகளை காப்பது மழையை எதிர்த்து காத்திருப்பது சம்சாரிகளுக்கும் அதாவது விவசாயிகள் கிடை மேய்ப்பவர்களுக்கும் இடையே நடக்கும் பேச்சுவார்த்தைகள் ஆகியவை கரிசல் மக்களின் கூட்டு வாழ்க்கையையும் இயற்கை சார்ந்த அவர்தம் பொருளாதாரத்தையும் இந்நாவல் வெளிப்படுத்துகின்றன. கரிசல்காட்டு பகுதியில் ஆடுகளை மந்தையாக பராமரித்து இரவு வேளையில் விவசாய நிலங்களில் கிடை அமைத்து எருவிடும் ஆட்டுக்காரர்களின் வாழ்க்கை முறையை மையமாக கொண்ட கதை ஏன் இன்னாவல் கூறுகின்றது சடை சாமி மற்றும் சங்கரன் ஆகியோர் ஆட்டுக்கிடை பராமரிப்பு அவர்களின் உழைப்பு மற்றும் அவர்களுக்கிடையிலான பிணைப்பு போன்றவற்றை கதை நம்மிடையே ஆசிரியர் வட்டார வழக்குச் சொற்கள் ஓடு பிணைத்து தருகின்றார் மழை இல்லாத கரிசல் நிலத்தில் ஆடுகளுக்கு தேவையான தீவனமும் குடிக்க தண்ணீரும் கிடைக்காமல் ஆட்டுக்காரர்கள் படும் துயரங்களையும் மிக தத்ரூபமாக வட்டார வழக்கு உரையாடல்களுடன் விவரித்துள்ளார்.

அடைப்பும் கோடு, கிடைக்கட்டை, செவல் காய்ச்ச்சை, தொழுவம் ஒப்பாரி, அமுக்கு ஆசனை இருசு உச்சினி ஏத்தி ஒத்தையடி கிடாரி குந்துகை சாய் மானம் சீமை சூதானம் தம்பு திராணி, புல்லாச்சி, மம்பட்டி, வம்பு,

நாவலில் இடம்பெற்றுள்ள கரிசல் மண்ணிற்கே உரிய வட்டார வழக்குச் சொற்கள் ஆகும்.கிடைக்காரி கிடைபோடும் மேச்சல் சமூகத்து பெண்ணை குறிப்பதாகும் அம்மாஞ்சி தாய்மாமன் குறிக்கும் சொல். சம்சாரிகள், வக்கரணம் அடைப்பனை, புலப்பருத்தல், கொல்லை, போன்ற வட்டார வழக்குச் சொற்களும் காணப்படுகின்றன.

கிடை நாவலின் உரையாடல்கள் செயற்கையான இலக்கிய நடையில் இல்லாமல் மக்கள் இயல்பாக பேசும் ஒளி குறிப்புகளுடன் பேச்சு வழக்கின் படி அமைந்துள்ளது கதாபாத்திரங்களின் பேச்சில் இயல்பான ஏளனம் பாசம் கோபம், ஆகியவை வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்

“ஏல அங்கன என்ன பாத்துக்கிட்டு நிக்க சும்மா ஆட்ட மரிச்சு உடுல “
“ஏம்பா இந்த ஆடுகள் எல்லாம் எந்த ஊருடையது?யாரு மேய்க்கிறது “
“நம்ம ஊரு ஜனங்களுக்கு இது என்ன புதுசா ஆடு மேய்க்கிறது தானே நம்ம பொழப்பு “
“அந்தப் பக்கம் போகாதிய அங்கே மேச்சலுக்கு இடம் கெடையாது”

இந்த உரையாடல் கரிசல் மண்ணின் மனித உறவுகளையும் அவர்களின் வேலைப்பளுவையும் அப்படியே பிரதிபலிக்கின்றன.

## முடிவுரை

கி ராஜநாராயணனின் படைப்புகளில் கரிசல் வட்டாரம் வழக்கின் அழகிகளும் வாழ்வியலும் தமிழ் இலக்கிய உலகில் வட்டார வழக்கு மொழியை வெறும் பேச்சு மொழியாக மட்டும் பயன்படுத்தாமல் அதை ஒரு பண்பாட்டு அடையாளமாகவும் வாழ்வியல் ஊடகமாகவும் மாற்றிய பெருமை கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படும் கி.ராஜநாராயணனுக்கு உரியது. கோபாலபுரத்துமக்கள், கிடை பிஞ்சுகள் ஆகிய மூன்று நாவல்களும் கரிசல் நிலத்தின் மண்வாசனை மனித உறவுகள் மற்றும் அவர்களின் வாழ்வியல் போராட்டங்களை வட்டார வழக்கு மொழியின் வழியே மிக இயல்பாக பதிவு செய்துள்ளார் ஆசிரியர் கோபாலபுரத்து மக்கள் என்ற நாவலில் புலம்பெயர்ந்து வந்த மக்களின் வாழ்வியலையும் அவர்களின் அன்றாட உரையாடல்களில் கலந்திருந்த தமிழும் தெலுங்கும். சார்ந்த வட்டார சொற்களையும் பதிவு செய்து ஒரு தலைமுறையின் வரலாற்றை மொழியின் வழியே உயிர்ப்பித்துள்ளார் ஆசிரியர் கிடை என்ற நாவலில் ஆடு மேய்க்கும் சமூகத்தின் தொழில் சார்ந்த கலைச்சொற்கள் இயற்கை சார்ந்த சார்ந்த சொற்கள் மற்றும் கிடை போடுதல் தொடர்பான உரையாடல்கள் மூலம் ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் பேச்சு வழக்கை உயிர்ப்பித்துள்ளார் பிஞ்சுகள் என்ற நாவலில் கிராமத்து குழந்தைகளின் உலகம் அவர்களின் விளையாட்டுகள் இயல்பான சொல் வழக்குகள் மற்றும் பெரியவர்களுடலான உரையாடல்கள் வழியே கரிசல் மண்ணின் தலைமுறை இடைவெளியற்ற வழக்கு மொழி தொடர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார் வட்டார வழக்குச் சொற்களும் உரையாடல்களும் வெறும் மொழி சார்ந்த ஆய்வுக்கு மட்டும் அல்லாமல் மறைந்து வரும் கிராமிய பண்பாட்டையும் மக்கள் வழக்காரங்களையும் பாதுகாக்கும் ஆவணமாக திகழ்கின்றன என்பது கி.ராஜநாராயணனின் படைப்புகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

## துணைநூற் பட்டியல் (References)

1. ராஜநாராயணன் கி. கோபாலபுரத்து மக்கள் அன்னம் வெளியீடு, சிவகங்கை.
2. ராஜநாராயணன். கி. கிடை ஐந்திணை பதிப்பகம் சென்னை.
3. ராஜநாராயணன் கி. பிஞ்சுகள் மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
4. ராஜநாராயணன் கி. வட்டார வழக்குச் சொல் அகராதி கரிசல் வட்டாரம் அகரம் வெளியீடு, சிவகங்கை.
5. சிவசுப்பிரமணியன்.ஆ. கரிசல் மண்ணும் மனிதர்களும் காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
6. பஞ்சாங்கம்.க.கரிசல் இலக்கியமும் கி ராஜநாராயணனும் வல்லினம் பதிப்பகம்,புதுச்சேரி.

© 2026 முனைவர். சகாயமேரி இ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..